# தாம்பரம் பெருநகராட்சி

2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 06.01.2020–ம் நாள் திங்கட்கிழமை *மாலை 4.30 மணிக்கு* தாம்பரம் பெரு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் அவசர கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தாம்பரம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
தாம்பரம்.
நாள். 06.01.2020

---

## பொருள்

பொருள் எண்.1

தாம்பரம் நகராட்சிக்கு 14வது மத்திய நிதி குழுமான்யம் (Central Grants-14th Central Finance Commission) 2019–20 ன் கீழ் ரூ.1068.08 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை 28 அவர்களின் உத்திரவின்படி நாள்.04.01.2020ல் 50 சதவீத மான்ய தொகை ரூ.534.04 இலட்சத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு சாலைப் பணிகள் மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 14வது மத்திய நிதி குழுமான்யம் (CFC) 2019–2020ன் கீழ் முன்னுரிமை அடிப்படையில் நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் இயற்கை இடர்பாடுகளினால் பழுதடைந்த சாலைகளை மறு சீரமைப்பு செய்து அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ள ரூ.540.00 இலட்சத்திற்கு கீழ்க்கண்ட பணிகளுக்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது

.

| வ. எ | வார்டு எண் | வேலையின் பெயர் | சாலை நீளம் (கி.மீ) | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 1 | கே.கே. பாளையம், பஜனை கோயில் தெரு, கே.கே பாளையம் அம்மன் கோவில் 1வது தெரு, கே.கே. பாளையம் அம்மன் கோவில் 2வது தெரு ஆகிய பகுதிகளுக்கு தார் சாலை அமைத்தல் | 565.00 | 31.00 |
| 2 | 11 | ஏரிக்கரை தெரு தார் சாலை அமைத்தல் | 625.00 | 45.00 |
| 3 | 29,34 | திருவள்ளுவர்புரம் தெரு தார் சாலை அமைத்தல் | 690.00 | 37.00 |
| 4 | 30 | கல்யாண் நகர் 1வது தெரு மற்றும் 2வது தெருகளுக்கு தார் சாலை அமைத்தல் | 550.00 | 30.00 |
| 5 | 31 | டேனியல் தெரு, திருவள்ளுவர் தெரு , தெற்கு தெரு, தெற்கு குறுக்கு தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைத்தல் | 545.00 | 26.50 |
| 6 | 32 | லஷ்மிபுரம் 13வது தெரு, லஷ்மிபுரம் 14வது தெரு மற்றும் லஷ்மிபுரம் 15வது தெரு ஆகிய தெருகளுக்கு தார் சாலை அமைத்தல் | 665.00 | 36.00 |
| 7 | 33,35 | கக்கன் தெரு தார் சாலை அமைத்தல் | 435.00 | 43.00 |
| 8 | 12,13 | ஐய்யப்பன் தெரு,காசியப்பர் தெரு ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைத்தல் | 398.00 | 19.50 |
| 9 | 12 | குலசேகரன் தெருவிற்கு தார் சாலை அமைத்தல் | 270.00 | 17.50 |
| 10 | 13 | திருவள்ளுவர் தெரு (வால்மீகி தெரு முதல் பெரியாழ்வார் தெரு) தார் சாலை அமைக்கும் | 540.00 | 24.00 |
| 11 | 14 | பரத்வாஜர் தெருவிற்கு தார் சாலை அமைத்தல் | 268.00 | 19.50 |
| 12 | 14,17 | மோகன் தெரு, கல்பனா நகர், மணிமேகலை தெரு மேற்கு தெருவிற்கு தார் சாலை அமைத்தல் | 381.00 | 18.50 |
| 13 | 17 | மணிமேகலை தெரு கிழக்கு தெரு தார் சாலை அமைத்தல் | 386.00 | 20.50 |
| 14 | 19,20 | கணபதி காலனி, முல்லை தெருகளுக்கு தார் சாலை அமைத்தல் | 612.00 | 24.80 |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | 23 | வாஞ்சிநாதன் தெரு, நேரு தெருக்களுக்கு தார் சாலை அமைத்தல் | 527.00 | 23.50 |
| 16 | 24,26 | அசோக் நகர் மேற்கு தெரு, விஜயரங்கம் தெருகளுக்கு தார் சாலை அமைத்தல் | 497.00 | 22.35 |
| 17 | 22 | புரப்பசர் காலனி பகுதிக்கு தார் சாலை அமைத்தல் | 395.00 | 17.60 |
| 18 | 27 | முருகேசன் தெரு, முருகேசன் தெரு குறுக்கு தெரு மற்றும் செல்லியம்மன் கோவில் 3வது தெருக்களுக்கு தார் அமைத்தல் அமைத்தல் | 390.00 | 15.25 |
| 19 | 30 | தேவராஜ் நகர் பிரதான சாலை, குறிஞ்சி நகர் பிரதான சாலை தார் சாலை அமைத்தல் | 506.00 | 24.50 |
| 20 | 30 | குறிஞ்சி நகர் 1வது தெரு, தேவராஜ் தெரு சந்திப்பு, குறிஞ்சி நகர் 2வது தெரு, குறிஞ்சி நகர் 3வது தெரு,குறிஞ்சி நகர் 4வது தெரு,குறிஞ்சி நகர் 5வது தெரு,குறிஞ்சி நகர், வெங்கடேஸ்வரா தெருக்களுக்கு தார் சாலை அமைத்தல் | 484.00 | 20.00 |
| 21 | 33,35 | ராஜ் தெரு, சிவசண்முகம் தெரு, சண்முகம் சாலை (சிவசண்முகம் சாலை முதல் கக்கன் சாலை) தார் சாலை அமைத்தல் | 440.00 | 24.00 |
| | | மொத்தம் | 10169.00 | 540.00 |

அலுவலக குறிப்பு :– 14வது மத்திய நிதி குழு மான்யம் (CFC) 2019–20 ன் கீழ் மொத்தம் ஒதுக்கீடு தொகை ரூ.1068.08 இலட்சத்தில் ரூ.534.04 இலட்சத்திற்கு சாலை அமைக்கலாம் கூடுதல் செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 45/2020/இ1)

பொருள் எண்.2

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 02.12.2008 நாளிட்ட அரசாணை எண்.238 ன்படி, தாம்பரம் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நகராட்சியின் தரம் உயர்த்தப்பட்டதன் அடிப்படையில் தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகளின்படி சிறப்பு நிலை நகராட்சிகளுக்கான பொதுப்பணி பணியிடங்கள் தரம் உயர்த்தப்படாமல் உள்ளது.

நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை 28 அவர்களின் கடிதம் ந.க.எண்.15891/2016/எச்1 நாள்.06.01.2020 ல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் அதன் தரத்திற்கு ஏற்றவாறு, நகராட்சிப் பொது பணி பிரிவில்

விதிகளின்படியும், நிலைகளின் படி மேலாளர், வருவாய் அலுவலர், உதவி வருவாய் அலுவலர் மற்றும் கணக்காளர் பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் நகராட்சிகளின் நிலைகளுக்கு ஏற்றவாறு பணியிடங்களின் நிலை உயர்த்த வேண்டி மேற்குறிப்பிடப்பட்ட கடிதத்துடன் இணைத்து வரப்பெற்றுள்ள அனைத்து பணியிடங்களின் சரி தன்மையினை நன்கு பரிசீலனை செய்து உரிய தீர்மான ஒப்புதலுடன் அறிக்கை அனுப்பி வைத்திட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதற்கிணங்க, தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகளின்படி(as per TamilNadu Municipal General Service Rules) சிறப்பு நிலை நகராட்சிக்குரிய பணியிடங்களாகிய கீழ்கண்ட பணியிடங்களை தாம்பரம் நகராட்சிக்கு தரம் உயர்த்தி வழங்க உரிய பிரேரணையினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலம் அரசுக்கு அனுப்பி வைத்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ.எண். | பதவி | தற்போது உள்ள அலுவலர் பணியிட நிலை | தமிழ்நாடு பொதுப்பணி விதிகளின்படி சிறப்பு நிலை நகராட்சியில் தரம் உயர்த்தப்பட வேண்டிய பணியிட வகுப்பு மற்றும் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| 1. | மேலாளர் | வகுப்பு-II | வகுப்பு-I | 1 எண்ணிக்கை |
| 2. | வருவாய் அலுவலர் | வகுப்பு-IV | வகுப்பு-IA | 1 எண்ணிக்கை |
| 3. | உதவி வருவாய் அலுவலர் | | வகுப்பு-II | 2 எண்ணிக்கை |
| 4. | கணக்கர் | வகுப்பு-IV | வகுப்பு-II | 1 எண்ணிக்கை |

**அலுவலக குறிப்பு :-** தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகளின்படி (as per TamilNadu Municipal General Service Rules) சிறப்பு நிலை நகராட்சிக்குரிய பணியிடங்களாகிய மேலாளர் பணியிடத்தை வகுப்பு-I நிலைக்கும், வருவாய் அலுவலர் பணியிடத்தை வகுப்பு-IA நிலைக்கும், கணக்கர் பணியிடத்தை வகுப்பு-II நிலைக்கும், புதியதாக உதவி வருவாய் அலுவலர் பணியிடம் வகுப்பு-II (2 எண்ணிக்கை) நிலைக்கும் தரம் உயர்த்தி உரிய பிரேரணையினை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைத்திட அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.46/2020/சி1)

பொருள் எண்.3

**இந்நகராட்சி** எல்லைக்குட்பட்ட வார்டு **எண்.**2 கடப்பேரி **புதிய** பேருந்து **நிலையம்** **வணிக** வளாக கடை **எண்.** 4, 5, 13, 14, 15, 19, 21, 22, 23, 24, 25, மற்**றும்** 27 ஆகிய கடைகளுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் 19.9.2017, 13.10.2017,

09.11.2017, 06.12.2017, 20.2.2018, 15.3.2018, 27.3.2018, 20,04,2018, 29.6.2018, 19.7.2018, 10.8,2018, 19,9.2018, 28.12.2018, 22.01.2019 மற்றும் 20.2.2019 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் அதில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை.

மேற்காணும் பேருந்து நிலையம் வணிக வளாகத்தில் அமைந்துள்ள பொருட்கள் வைப்பறை **(Cloak Room)** மற்றும் உணவு விடுதி **(Hotel)** ஆகிய கடைகள் தொடர்ந்து கடை நடத்த இயலாது என தெரிவித்து குத்தகைதாரர்கள் நகராட்சி வசம் கடை ஒப்படைக்கப்பட்டதால் குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டது.

எனவே, மேற்படி ஏலம் போகாத 12 கடைகள், பொருள் வைப்பறை (Cloak Room) மற்றும் உணவு விடுதி (Hotel) ஆகிய இரண்டு கடைகளுக்கும் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நிர்வாக நலன் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4266/2013/அ1)

பொருள் எண்.4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 39 வரை உள்ள வார்டுகளில் பழைய கட்டிடங்களுக்கு ஏற்கனவே உள்ள வரிவிதிப்புகள் நீக்கம் செய்யப்படாமல் உள்ளது மற்றும் ஒரே கட்டிடத்திற்கு தவறுதலாக இருமுறை சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு வசூலிக்க முடியாமல் இரட்டை வரி விதிப்பாக கேட்பு பதிவேட்டில் உள்ளது மற்றும் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் நில எடுப்பு தேசிய நெடுஞ்சாலைகள் திட்டங்கள் காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண்.177/2007/தே.நெ.45 நாள்.07.08.2009 மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண். 62756/2006/எப்3 நாள்.24.03.2010ன் படி G.S.T. சாலை, வேளச்சேரி ரோடு, முடிச்சூர் ரோடு, பாரத மாதா தெரு ஆகிய பகுதிகளில் சாலை விரிவாக்கம் செய்யப்பட்ட போது, மேற்படி இடங்களில் உள்ள குடியிருப்புகள், வணிக கட்டிடங்கள், கடைகள் அப்புறப்படுத்தப்பட்டதால் அவற்றிற்கு உண்டான சொத்துவரி விதிப்புகள் கேட்பு பதிவே.டில் நீக்கம் செய்யப்படாமல் தொடர்ந்து கணினி கேட்பில் நிலுவையாக உள்ளதை, நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூல் தொடர்பான 17.12.2018 தேதிய ஆய்வுக் கூட்டங்களில் நிலுவையாக உள்ள வரியினங்களின்

சரித்தன்மை அறிந்து கேட்பிலிருந்து நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளதற்கிணங்க மேற்படி சொத்துவரி விதிப்பு எண்கள் நீண்ட காலமாக வசூலிக்க இயலாத நிலையில் உள்ளதால், இந்நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்டு குழுக்கள் அமைத்து கள ஆய்வு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி குழுக்கள் அளித்துள்ள அறிக்கையின்படி, இணைப்பில் கண்டுள்ள வார்டுகளில் உள்ள வரிவிதிப்பு எண்கள் மற்றும் அதற்குண்டான நிலுவைத்தொகை ரூ.7184220/—ஐ வஜா செய்ய மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—** நிர்வாக நலன் கருதி இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள வரிவிதிப்பு எண்கள் மற்றும் அதற்குண்டான கேட்பு நிலுவைத் தொகை ரூ.7184220/—ஐ வஜா செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5384/2018/அ1)

## தாம்பரம் நகராட்சி

சொத்துவரி நீக்கம் செய்ய வேண்டிய பட்டியல்

| வ. எண் | வருவாய் உதவியாளர்கள் பெயர் திருவாளர்கள் | வார்டு எண் | நிலுவை வருடம் 2018—19 IIம் அரையாண்டு வரை நீக்கம் செய்ய வேண்டிய தொகை ரூ. | நடப்பு வருடம் 2019—2020 IIம் அரையாண்டு வரை நீக்கம் செய்ய வேண்டிய தொகை ரூ. | மொத்தம் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | N. சங்கரன் வருவாய் ஆய்வர்(சி) | 17,18,19,20,21 | 1746662 | 281944 | 2028606 |
| 2 | J. பாபு | 10,35,36,37 | 688380 | 192522 | 880902 |
| 3 | M. பழனி | 22,23,24,25,26,27 | 474358 | 90065 | 564423 |
| 4 | A. சார்லஸ் | 28,29,30,31,34 | 233004 | 131446 | 364450 |
| 5 | A.S. தண்டபாணி | 1,2,3,4,5,6,7,8,9,39 | 889766 | 199550 | 1089316 |
| 6 | S.நரேந்திரன் | 11,12,13,14,15,16 | 1264674 | 210968 | 1475642 |
| 7 | A. ஜனார்த்தனன் | 32,33,38 | 653170 | 127711 | 780881 |
| | | மொத்தம் | 5950014 | 1234206 | 7184220 |

பொருள் எண்.5

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36 பழைய பேருந்து நிலைய வளாகத்தில் பல அடுக்கு வாகனம் நிறுத்தம் (Multi Level Car Parking) அமைக்கும் பணி மற்றும் தானியங்கி நடைபாதை (Escalator) அமைக்கும் பணிகள் மேற்கொள்ள திட்டமிட்டிருந்தபடி பணி துவங்கும் நிலையில் உள்ளதால், மேற்படி இடத்தில் இயங்கிவந்த பழைய பேருந்து நிலையம் முன்புறம் நவீன கட்டண கழிப்பிடம் வசூல் உரிமம் மற்றும் பின்புறம் நவீன கட்டணம் கழிப்பிடம் வசூல் உரிமம் ஆகிய இரண்டு குத்தகை இனங்கள் 01.4.2018 முதல் குத்தகை உரிமங்கள் ரத்து செய்யப்பட்டது. பொது மக்கள் அத்தியாவசியத்தையும், நகராட்சியின் வருவாய் ஈட்டும் வகையில் கருத்தில் கொண்டு, மேற்படி பணிகள் துவங்கும் நாள் வரையில் இரண்டு குத்தகை இனங்களுக்கும் 01.4.2018 முதல் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி இரண்டு கட்டணக் கழிப்பிடங்களின் குத்தகை வசூல் உரிமம் உயர்வு செய்யும் வகையில் 01.4.2020 முதல் மூன்று ஆண்டுகளுக்கு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகைக்கு விடவும், அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நிர்வாக நலன் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மறு ஏலம்/ ஒப்பந்தப் புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.060/2020/அ2)

பொருள் எண்.6

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.35 சண்முகம் சாலையில் அமைந்துள்ள நகராட்சி வணிக வளாகம் முதல் தளம் கடை எண்.15, 16, 17 மற்றும் 27 ஆகிய கடைகளுக்கு 21.4.2017, 17.5.2017, 15.6.2017, 19.7.2017, 11.08.2017, 19.9.2018, 20.2.2018, 16.3.2018, 20.4.2019, 18.5.2018, 29.6.2018, 19.7.2018, 18.4.2019, 21.5.2019, 13.6.2019, 24.7.2019, மற்றும் 28.8.2019 ஆகிய தேதிகளில் மறு ஏலம்/ ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டது அதில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை.

மேலும் துரைசாமி மார்க்கெட்டில் அமைந்துள்ள மட்டன் ஸ்டால் கடை எண்.5, 7 மற்றும் 8 ஆகிய மூன்று கடைகள் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மாத வாடகையின் செலுத்தாததால் கடையினை பூட்டி சீல் வைத்து நகராட்சி வசம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

எனவே, மேற்படி சண்முகம் சாலையில் அமைந்துள்ள வணிக வளாக கடைகள் ஏலம் போகாத நான்கு கடைகள் மற்றும் துரைசாமி மார்க்கெட்டில்

உள்ள மட்டன் ஸ்டால் கடை எண்.5, 7 மற்றும் 8 ஆகிய மூன்று கடைகளுக்கும் மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நிர்வாக நலன் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மறு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.399/2013/அ1)

பொருள் எண்.7

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண். 18ல் கிழக்கு தாம்பரம் ராஜா அய்யர் தெரு பகுதி தார் சாலை அமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 240/2019/இ1)

பொருள் எண்.8

இந்நகரரட்சியின் 2019–2020 ஆம் ஆண்டிற்கு சொத்துவரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் மற்றும் கடை வாடகை ஆகியவற்றின் நிலுவை மற்றும் நடப்பு கேட்பில் 100 சதவீதம் வசூல் இலக்கு அடைவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரின் 20.12.2019 தேதிய ஆய்வுக் கூட்டங்களில் அறிவுறுத்தப் பட்டது.

மேற்படி வரிவசூல் பணியை தீவிரப்படுத்தவும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோ மூலம் ஒலிப்பெருக்கி அமைத்து அனைத்து வார்டுகளிலும் கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரம் பகுதிகளில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நிர்வாக நலன் மற்றும் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4709/2019/அ2)

பொருள் எண்.9

இந்நகராட்சி வார்டு எண்.1 முதல் 39 வரை உள்ள வார்டுகளுக்கு கிழக்கு மற்றும் மேற்கு தாம்பரம் பகுதியில் தீவிர வரி வசூல் பணி மேற்கொள்ள

ஆட்டோ விளம்பரம் செய்ய ஒரு நாள் கட்டணம் (ஒலி பெருக்கி, பேட்டரி (ம) ஆம்பிலிபையர் உட்பட) வாடகைக்கு விலைப்புள்ளி வழங்க கோரப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, ஆட்டோ ஓட்டுநர்கள் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வழங்கியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஆட்டோ ஓட்டுநர் பெயர் (ம) முகவரி | ஒரு நாள் ஆட்டோ கட்டணம் (ஒலி பெருக்கி, பேட்டரி (ம) ஆம்பிலிபையர் உட்பட) |
|---|---|---|
| 1 | திரு.V.சந்திரசேகரன், ஆட்டோ ஓட்டுநர்,<br>வண்டி எண். TN11 S 4204,<br>க.எண்.18C, முத்துமாரியம்மன் கோவில் தெரு,<br>ஆதி நகர், கிழக்கு தாம்பரம், சென்னை–59 | ரூ.2500/– |
| 2 | திரு.P.நாகப்பன், ஆட்டோ ஓட்டுநர்,<br>வண்டி எண். TN11 AE 4748,<br>க.எண்.24, தங்கவேல் தெரு,<br>மேற்கு தாம்பரம், சென்னை–45 | ரூ.2700/– |

அலுவலக குறிப்பு:– 1) மேற்காணும் இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் காணும் திரு.V.சந்திரசேகரன், ஆட்டோ ஓட்டுநரின் விலைப்புள்ளி ரூ.2500/– குறைவாக வழங்கியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4709/2019/அ2)

பொருள் எண்.10

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் மௌலானா நகர் பிரதான சாலை மற்றும் கடப்பேரி பேருந்து நிலைய வளாகம் ஆகிய பகுதிகளில் குடிநீர் பணியினால் சேதமடைந்த தார் சாலையினை தார் கலவை கொண்டு சீரமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மானம் எண். நாள். 20 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 08.02.2019 ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.E. ரவி என்பவருக்கு நகரமன்ற தீர்மான எண். நாள் ல் ஒப்புதல் வழங்கப்பட்டதின் பேரில் 08.02.2019 ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதில் ரூ.4.02 இலட்சத்திற்கு மட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகைக்கு தார் ஒட்டுவேலை பணிக்கு பதிலாக மேற்கு தாம்பரம் பகுதியில் மழை, குடிநீர் குழாய்கள் பதித்தல், பாதாள சாக்கடை திட்டம் மற்றும் கேபிள்கள் பதித்தல் போன்ற காரணிகளால் சேதமடைந்து மிகவும் குண்டும் குழியுமாக உள்ள சாலைகளில் மக்களின்

பயன்பாட்டிற்கு ஏற்றபடி மேற்படி பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் தற்காலிக சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள இப்பணிக்கு ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.E. ரவி என்பவர் மூலமே மதிப்பீட்டிற்கு மிகாமல் பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(**ந.க.எண்.**351/2019/இ1)

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தாம்பரம் நகராட்சி

# <u>தாம்பரம் பெருநகராட்சி</u>

2020–ம் ஆண்டு ஜனவரி மாதம் 30.01.2020–ம் நாள் வியாழக்கிழமை *<u>மாலை 4.15 மணிக்கு</u>* தாம்பரம் பெரு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தாம்பரம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
தாம்பரம்.
நாள். 30.01.2020

## பொருள்

பொருள் எண்.1

இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு) அவர்களின் டிசம்பர் 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.

பொருள் எண்.2

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் டிசம்பர் 2019 ல் பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை பற்றிய விவரங்கள் கீழ்கண்டவாறு.

| பதிவு விவரம் | டிசம்பர் 2019 |
|---|---|
| பிறப்பு (மொத்தம்) | 242 |
| இறப்பு (மொத்தம்) | 103 |
| இறந்து பிறந்தவை | ஏதுமில்லை |

பொருள் எண்.3

காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் என புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் வார்டு மறுவரையறை செய்ய அறிவுறுத்தப்பட்டதற்கு இணங்க, தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 39 வார்டுகளின் எல்லைகளை மறுவரையறை செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.575/2020/தேர்தல்/நாள்.21.01.2020 மற்றும் தமிழ்நாடு மறுவரையறை ஆணையம், சென்னை–106 அளித்துள்ள கடிதம் ந.க.எண்.554/2020/EE1/ நாள்.27.01.2020ல் கண்டுள்ள கருத்துரு மற்றும் வழிமுறைகளின்படி, எல்லைகள் மறுவரையறை செய்து வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட 39 வார்டுகளின் எல்லை வார்டு மறுவரையறைக்கு 2011 ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படியுள்ள 174787 எண்ணிக்கையும், மற்றும் 31.3.2019 வரையுள்ள வரிவிதிப்பு செய்யப்பட்ட குடியிருப்பு மற்றும் மற்ற வீடுகளின் எண்ணிக்கை சேர்த்து 46743 கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு வார்டு எல்லை மறுவரையறை செய்யப்பட்டுள்ளன.

வரைவு வார்டு மறுவரையறை (Delimitation) 2020 பிரேரணையில் உள்ள உத்தேச புதிய வார்டு எண்.1 முதல் 39 வரையுள்ள தெருக்களின் பட்டியல், எல்லைகள் மற்றும் வரைபடங்கள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** தமிழ்நாடு மறுவரையரை ஆணையம் மற்றும் மாவட்ட மறுவரையறை அதிகாரி செங்கல்பட்டு அவர்களின் கருத்துரு மற்றும் வழிகாட்டுதலின்படி தயார் செய்யப்பட்ட 39 வார்டுகளின் மறுவரையறை (Delimitation) வரைவு பிரேரணையை மாவட்ட வரையறை அதிகாரி (ம) மாவட்ட ஆட்சித் தலைவர் செங்கல்பட்டு அவர்களின் வழியாக துறைத் தலைவர் ஒப்புதல் பெற்று மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.218 /2020/அ1)

பொருள் எண்.4

தாம்பரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் கீழ்கண்ட வாகனங்களின் நடைகள், செல்லும் வழித்தடங்கள், பணி செய்யும் நேரம் ஆகியவற்றை ஆய்வு செய்ய GPS கருவிகள் பொருத்திட ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், தோராய செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

வாகன விவரம்:-

| | |
|---|---|
| 1. | TN 22 V 9264 – TATA 407 TIPPER |
| 2. | TN 22 V 9265 – TATA 407 TIPPER |

| | |
|---|---|
| 3. | TN **22** AP 1185 – Eicher TIPPER |
| 4. | TN **22** AP **1186** – Eicher TIPPER |
| 5. | TN **22** AP 1184 – Eicher TIPPER |
| 6. | TN **22** AP 1734 – Eicher TIPPER |
| 7. | TN **22** AY 4942 – Ashok Leyland TIPPER |
| 8. | TN **22** AY 4835 – Ashok Leyland TIPPER |
| 9. | TN **22** BU 8718 – Ashok Leyland TIPPER |
| 10. | TN **22** BX 4457 – Compactor |
| 11. | TN **22** BX 4372 – Compactor |
| 12. | TN 22 BX 4465 – Pal Finger |
| 13. | TN 11 R 4698 – Sullage Tanker |
| 14. | TN 11 T 0671 – Sullage Tanker |

| TATA ACE | |
|---|---|
| TN 11 AK 0671 | TN 11 AK 5466 |
| TN 11 AK 5420 | TN 11 AK 5472 |
| TN 11 AK 5427 | TN 11 AK 5476 |
| TN 11 AK 5440 | TN 11 AK 5496 |
| TN 11 AK 5442 | TN 11 AK 5497 |
| TN 11 AK 5446 | TN 11 AK 5430 |
| TN 11 AK 5450 | TN 11 AK 5411 |
| TN 11 AK 5457 | TN 11 AK 5416 |

அலுவலக குறிப்பு:– அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.83/2020/எச்1)

பொருள் எண்.5

பொது சுகாதார பிரிவு–தாம்பரம் நகராட்சி–நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை 28 அவர்களின் கடித ந.க.எண்.1588/J1/2015 நாள்.15.06.2015 மற்றும் 19.10.2019 ம் தேதிய நேரடி அறிவுரை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், (இ) தாம்பரம் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரை நாள்.09.10.2019 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் 14.10.2019 ம் தேதிய ஆய்வுக் கூட்ட நேரடி அறிவுரையின் பேரிலும், தாம்பரம் நகராட்சி தனி அலுவலரின் தீர்மான எண்.521 நாள்.31.10.2019 ன் படி தாம்பரம் நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்ள கூடுதலாக 53 சுய உதவி குழு உறுப்பினர்கள் மூலம் 3 மாத காலத்திற்கு (23.10.2019 முதல் 22.01.2020 வரை) பணி மேற்கொள்ளப்பட்டது.

தற்போது இப்பணியின் அவசியம் கருதி மேலும் 3 மாத காலத்திற்கு (23.01.2020 முதல்) பணியினை தொடர்ந்து சுய உதவி குழுக்கள் மூலம் மேற்கொள்வதற்கும், செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**– மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பொது சுகாதார அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4357/2019/எச்1)

பொருள் எண்.6

தாம்பரம் நகராட்சி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் அரசாணை எண்.80 நாள்.28.05.2009 ல் ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்(துசூசூருசுஆ)கீழ் ரூ.160.97கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலம் நான்கு சிப்பங்களாக செயல்படுத்திட திட்டம் வகுக்கப்பட்டது.

இதில் சிப்பம் எண்.1ல் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். ECCI Ltd., மூலம் கிழக்கு தாம்பரம் பகுதியில் கழிவு நீர் நீரேற்று நிலையங்கள் கழிவுநீர் உந்து நிலையங்கள், பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி மிக மந்தமாக நடைபெற்றதனால் மேற்படி பணியினை 31.07.2014 ல் (CMWSSB) மூலம் ரத்து செய்து, மீதம் உள்ள பணியினை தாம்பரம் நகராட்சி மூலம் மேற்கொள்ள கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டு தாம்பரம் நகராட்சி மூலம் மீதம் விடுப்பட்ட பணிகளுக்கு அதே மதிப்பீட்டினை 2015–16 செந்தர பட்டியலின் விலை விகிதத்தில் விரிவான திட்ட அறிக்கை மூன்று சிப்பங்களாக ரூ.41.82 கோடிக்கு நகராட்சியால் தயாரிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.22664/2014–2/DO1 நாள்.12.01.2016–ல் மூன்று சிப்பங்களாக தொழில் நுட்ப அங்கீகாரம் பிரித்து அளிக்கப்பட்டது.

மேற்படி மூன்று சிப்பங்களை சிப்பம் எண்.1ஏ, 1பி, 1சி என கிழக்கு தாம்பரம் பகுதியில் விடுப்பட்ட பணிகள் மெசர்ஸ்.VVV Construction(P)Ltd, சென்னை–78. என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு 03.03.2016ந் தேதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொண்டு வரும் நிலையில் கீழ்காணும் காரணங்களினால் பணிகள் மேற்கொள்வது தடை ஏற்பட்டது.

1. 2016 சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் 04.03.2016 முதல் 19.05.2016 வரை அமலில் இருந்தது.

2. மேற்படி பணி 23.05.2016ல் துவங்கி தொடர்ந்து பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பெரும்பாலான இடங்களில் கடினத்தன்மை வாய்ந்த பாறைகள் நிறைந்த பகுதியாக இருந்ததால், மேற்படி பாறைகளை அகற்றி பணி மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது
3. மேற்படி கடின பாறைகள் உடைக்க வேண்டி (Hard Rock Controlled Blasting) மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத கூடுதல் இனங்களுக்கு துறை இன விலைப்பட்டியல் (Supplementary item data) தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை–28 அவர்களிடம் 13.10.2016ல் சமர்ப்பிக்கப்பட்டு 22.11.2016ல் அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது.
4. 2016ல் ஆண்டு வடகிழக்கு பருவமழை காரணமாகவும் டிசம்பர் மாதம் வர்தா புயல் பாதிப்பு மற்றும் இயற்கை சீற்றத்தினால் பணி மேற்கொள்ளப்படாததால் காலதாமதம் ஏற்ப்பட்டுள்ளது. மேலும் பருவமழை காரணத்தால் நிலத்தடி நீர் வெளியேற்றுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.
5. மீண்டும் 05.01.2018 தேதிய கடிதத்தில் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத இனமான 700mm CI குழாய்கள் மற்றும் உதிரிபாகங்கள், துணை இன விலைப்பட்டியல் (Supplementary item data) அங்கீகாரம் கோரியதில் 05.02.2019ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.
6. நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலைகள் பணி மேற்கொள்ள உரிய அனுமதி கோரி 20.09.17, 20.04.18, 27.07.18, 31.12.18 மற்றும் 31.05.2019 ஆகிய தேதிகளில் நகராட்சி மூலம் கடிதம் அனுப்பட்டு நெடுஞ்சாலை துறையின் மூலம் 24.01.18, 6.6.18, 7.8.18, 31.1.19 மற்றும் 1.07.2019 தேதியில் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி பெறப்பட்டும் போக்குவரத்து காவல் துறையின் மூலம் அனுமதி பெறகால தாமதம் ஏற்பட்டதாலும், இரவு நேரங்களில் 11.00 முதல் இரவு 4.00 மணிவரை மட்டும் பணி மேற்கொள்வதால் காலதாமதம் ஏற்பபட்டுள்ளது. நெடுஞ்சாலை துறை சாலைகளில் பெரும்பலான இடங்களில் சாலை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அகற்றப்படாத காரணத்தில் 800மீட்டர் நீளம் பணி நிலுவையில் உள்ளது.

மேற்படி காரணங்களினால் திட்ட இலக்கின் படி (Mile stone) பணி மேற்கொள்ளும் காலதாமதத்திற்காக நகராட்சி மூலம் பணி மேற்கொள்ள 5முறை கால நீட்டிப்பு (Extension of time) 31.12.2019 வரை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி காரணங்களால் ஏற்பட்ட காலதாமதத்தினால் பணிகள் 2017–18 ஆம் ஆண்டில் பணி மேற்கொண்டமைக்கு சிமெண்ட் கம்பி, மின் பொருட்கள், DI குழாய்கள், உள்ளூர் வாங்கப்படும் பொருட்கள் மற்றும் ஆட்கள் கூலி ஆகியவைக்களுக்கான விலை மாற்றத்தினால் திட்ட பணியினை விரைந்து முடித்து பயன் பாட்டிற்கு கொண்டுவர வேண்டி ஒப்பந்ததாரால் விலைமாறுதல் கட்டணம் வழங்க கோரப்பட்டதால், மேற்படி பொருள் குறித்து தாம்பரம் நகராட்சி ஆணையாளர் கடித ந.க.எண்.6570/2008/இ2 நாள்.09.12.2019ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் தெளிவுரை கோரப்பட்டதில் மேற்கண்ட காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி நமூனாவில் தெரிவிக்கப்பட்டுள்ள படி நகராட்சி ஆணையாளர் முடிவு எடுத்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை–28 அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் ந.க.எண்.31315/2019/பாசாதி–2 நாள்.08.01.2020 ன்படி ஒப்பந்தப்புள்ளி நமுனாவில் வழிவகை உள்ளதால் தொகை வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: –மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 6570/2008/இ2)

பொருள் எண்.7

தாம்பரம் நகராட்சி பகுதியில் உள்ள சாலைகளில் சேர்ந்துள்ள கட்டிட கழிவுகள் மற்றும் மண் குவியல்களை JCB இயந்திரம் மற்றும் டிப்பர் லாரிகள் மூலம் அப்புறப்படுத்துதல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.240/2019/இ1)

பொருள் எண்.8

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம், வார்டு எண்.32ல் சி.டி.ஓ காலனி 1வது தெருவில் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய ஆர்.சி.சி மூடுபலகை அமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ5.40 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 240/2019/இ1)

பொருள் எண்.9

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம், வார்டு எண்.27 ல் ரிக்கி கார்டன் 1வது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 240/2019/இ1)

பொருள் எண்.10

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம், வார்டு எண்.22 ல் அம்பேத்கார் தெரு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 240/2019/இ1)

பொருள் எண்.11

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம், வார்டு எண்.22 ல் கலைஞர் தெரு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறபாலம் அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.75 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 240/2019/இ1)

பொருள் எண்.12

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம், வார்டு எண்.32 ல் சி.டி.ஓ காலனி 2வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் கூடிய ஆர்.சி.சி மூடுபலகை அமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.95 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 240/2019/இ1)

பொருள் எண்.13

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம், வார்டு எண்.1 ல் கே.கே. பாளையம் கங்கையம்மன் கோவில் தெரு, பஜனை கோவில் தெரு, லெனின் தெரு ஆகிய பகுதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்வாய்களுக்கு ஆர்.சி.சி மூடுபலகை அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு

ரூ.6.10 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 240/2019/இ1)

பொருள் எண்.14

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம், வார்டு எண்.35 ல் ஜி.எஸ்.டி சாலை சர்வீஸ் சாலையில் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய ஆர்.சி.சி மூடுபலகை அமைத்தல், வார்டு எண்.28, பெருமாள் கோவில் குறுக்கு தெரு மழைநீர் வெளியேற்று கால்வாய் (Disposal Drain) அமைத்தல் மற்றும் மதுரவாயில் பைபாஸ் சர்வீஸ் சாலை மழைநீர் கால்வாயினை தூர் வாருதல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.70 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 240/2019/இ1)

பொருள் எண்.15

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகளாலும் மற்றும் அதிக போக்குவரத்து காரணமாகவும், இயற்கை இடர்பாடுகள் காரணமாகவும் சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு (TURIP) 2018–19 திட்டத்தின் கீழ் மறு சீரமைப்பு செய்து அபிவிருத்தி செய்ய ரூ.1000.00 லட்சம் மதிப்பீட்டில், 6 சிப்பங்களாக பிரித்து செயல்படுத்த, நகரமன்ற தீர்மான எண்.2620, நாள் 29.06.16ல் அனுமதி பெறப்பட்டதன் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி செயல்முறை ந.க.எண்.12981/2018/இ3, நாள்.24.07.2018 ல் வழங்கப்பட்டது. மேலும் மேற்படி திட்ட மதிப்பீடுகளுக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.20308/2018/DO1, நாள்.31.08.2018 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, 28.09.2018ல் ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு நகரமன்ற தீர்மான எண். 2967, நாள். .09.2018ல் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களது ஒப்பந்தபுள்ளிக்கு ஒப்புதல் பெறப்பட்டு, 13.12.2018ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழான சிப்பம் எண்.6க்கு ரூ.172.00 இலட்சத்திற்கு திரு.M. ஞானவேல் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. இச்சிப்ப பணியில் சர்வீஸ் சாலை முதல் சி.டி.ஓ காலனி 3வது தெரு வரை தார் தளம் மற்றும் ஆர்.சி.சி மூடுபலகையுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. தற்போது பொது பணி துறையின் மூலம் மதுரவாயில் புறவழிச்சாலை சர்வீஸ் சாலையில் ஏரியின் உபரி நீர் செல்லும் வகையில் ரூ.20.00

கோடி மதிப்பீட்டில் 15 அடி அகலத்திற்கு கால்வாய் கட்டுப்பட்டுள்ளதால். சிப்பம் எண்.6 இல் தயாரிக்கப்பட்ட சி.டி.ஓ காலனி 3வது தெருவில் ஒருபுறம் 2அடி அகலத்திற்கு நுழைவு (Vent) கொண்ட புதிய கால்வாய் அமைத்து தரவும், மறுபுறம் ஏற்கனவே உள்ள கால்வாய்க்கு மூடுபலகை அமைத்திடவும், 3வது தெரு விரிவு சாலை, 3வது தெரு விரிவு,பாண்டியன் தெரு, வசந்தம் நகர், சப்தகிரி நகர் பகுதி சாலைகள் மழை வெள்ளத்தால் சேதமடைந்து உள்ளதாலும் சப்தகிரி நகர் சாலைகள் மழைநீரில் மூழ்கிவிடுவதாலும், இச்சாலைகள் செப்பனிட்டு தர ஊகூடீ காலனி 3வது தெரு மற்றும் 3வது தெரு விரிவு பகுதி குடியிருப்பு நலச்சங்கள் கோரிக்கையின் பேரிலும், வெள்ள பகுதிகளை பார்வையிட்டு நகராட்சி அலுவலர்களின் அறிவுரையின் படியும் சி.டி.ஓ காலனி 3வது தெருவில் ஒருபுறம் புதிய மழைநீர் வடிகால்வாய் அமைத்திடவும் ஒருபுறம் மூடுபலகை அமைத்திடவும், சி.டி.ஓ காலனி 3வது தெரு, 3வது தெரு விரிவு சாலை, 3வது தெரு விரிவு பாண்டியன் தெரு, வசந்தம் நகர் பகுதி சாலைகளில் தார் சாலை அமைத்திடவும், சப்தகிரி நகர் உயர்த்தி தார்சாலை அமைத்திடவும், இப்பணிக்கு ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.M. ஞானவேல் என்பவர் மூலம் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில் மதிப்பீட்டு தொகை ரூ.172.00 இலட்சத்திற்கு மிகாமல் பணியினை செய்து முடித்திட தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1975/2018/இ1)

பொருள் எண்.16

இந்நகராட்சி பகுதியில் பொது நிதியின் கீழ் மேற்கொள்ள வேண்டி சாலை அமைத்தல், மழைநீர் கால்வாய் அமைத்தல், கால்வாய்களுக்கு ஆர்.சி.சி மூடி அமைத்தல், மற்றும் இதர பணிகளுக்காக 22.01.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) | நகரமன்ற தீர்மான எண், மற்றும் நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | **மதிப்பீட்டு விலையில்** | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | **சதவீதம்** (%) | **சதவீதம்** (%) |
| **1** | அருள் நகர், காமராஜ் தெரு பாதாள சாக்கடை கழிவுநீரேற்று நிலையம் பகுதிகளில் தடுப்பு (partition) ஏற்படுத்துதல் | **4.00** | ந.தீ.ம.எண். நாள்.**31.12.19** | **1.** மெசர்ஸ். SRI Blue metal | **(–) 0.40%** | குறைவு |
| | | | | **2.** திரு. S. நல்லதம்பி | (+) **1.50%** | அதிகம் |

| வ. எ ண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) | நகரமன்ற தீர்மான எண், மற்றும் நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | **மதிப்பீட்டு விலையில்** | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | சதவீதம் (%) | சதவீதம் (%) |
| 2 | ஜி.எஸ்.டி TTC அருகில் கழிவறை (Namma Toilet) பழுதுபார்த்தல் | 1.00 | ந.தீ.ம.எண். நாள்.31.12.19 | 1.மெசர்ஸ். ஜான்சன் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் | (–) 0.02% | குறைவு |
| | | | | 2. மெசர்ஸ். பி.ஜி எலக்ட்ரிகல் ஒர்க்ஸ் | (+) 1.47% | அதிகம் |
| 3 | கிழக்கு தாம்பரம் என்.கே. லேன், ரோஜா தோட்டம் 1வது, 2வது தெரு, பிள்ளையார் கோவில் தெரு, கங்கை தெரு சந்திப்பு மற்றும் வைகை தெரு பிள்ளையார் கோவில் தெரு சந்திப்பு ஆகிய இடங்களில் ஆர்.சி.சி சிறுபாலம் அமைக்கும் | 9.50 | ந.தீ.ம.எண். நாள்.31.12.19 | 1.மெசர்ஸ். Arunachalam Infrastructure Development | (–) 0.05% | குறைவு |
| | | | | 2. திரு. E. ரவி | (+) 0.21% | அதிகம் |
| 4 | கிழக்கு தாம்பரம் இரட்டை சாலையில் தார் தளம் அமைத்தல் | 6.50 | ந.தீ.ம.எண். நாள்.31.12.19 | 1. திரு.P. ரகுநாதன் | (–) 0.02% | குறைவு |
| | | | | 2. திரு.J. சம்பத்குமார் | (+) 0.59% | அதிகம் |
| 5 | அம்பேத்கார் திருமண மண்டபம் பராமரிப்பு பணிகள் | 5.00 | தனிஅலுவலர் முன்அனுமதி நாள். 02.12.19 | 1.மெசர்ஸ். Arunachalam Infrastructure Development | 0.00% | மதிப்பீடு சதவீதம் |
| | | | | 2. திரு. E. ரவி | (+) 0.60% | அதிகம் |
| 6 | கடப்பேரி புதிய பேருந்து நிலையத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்திடும் பணி | 4.50 | தனிஅலுவலர் முன்அனுமதி நாள். 02.12.19 | 1. மெசர்ஸ். K.P. கான்ட்ராக்டர் | 0.00% | மதிப்பீடு சதவீதம் |
| | | | | 2. திரு.கே. ராஜ்குமார் | (+) 0.18% | அதிகம் |
| 7 | கண்ணன் தெரு மற்றும் எம்.இ.எஸ் சாலையில் சிறுபாலம் மற்றும் ஆர்.சி.சி மூடுபலகை அமைத்தல் | 6.00 | தனிஅலுவலர் முன்அனுமதி நாள். 02.12.19 | 1. மெசர்ஸ். K.P. கான்ட்ராக்டர் | 0.00% | மதிப்பீடு சதவீதம் |
| | | | | 2. திரு.கே. ராஜ்குமார் | (+) 0.58% | அதிகம் |
| 8 | பாரதிதாசன் தெரு, தர்மதோட்டம் தெரு பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் மங்களபுரம் 2வது தெரு பொது கிணற்றிக்கு ஆர்.சி.சி | 6.00 | தனிஅலுவலர் முன்அனுமதி நாள். 02.12.19 | 1.மெசர்ஸ். Arunachalam Infrastructure Development | (+) 0.01% | அதிகம் |
| | | | | 2. திரு. E. ரவி | (+) 2.01% | அதிகம் |

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) | நகரமன்ற தீர்மான எண், மற்றும் நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலையில் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | சதவீதம் (%) | சதவீதம் (%) |
| | கால்வாய் அமைத்தல் | | | | | |

**அலுவலக குறிப்பு:-** வரிசை எண்.1 முதல் 8 வரை உள்ள பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களது குறைந்த ஒப்பந்தபுள்ளிகளை ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்.

(ந.க.எண். 351/2019/இ1,இ3)

பொருள் எண்.17

தாம்பரம் நகராட்சியால் செலுத்தப்படவேண்டிய நில அளவை கட்டணம் மற்றும் நில அளவை பணியாளர்களின் ஓய்வூதியப் பங்குத்தொகை செலுத்துவது குறித்து உதவி இயக்குநர் நில அளவைப் பதிவேடுகள் துறை காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் எண்.அ4/4350/2019 நாள்.19.12.2019 தேதிய கடிதத்தில் பட்டியலிட்டு அட்டவணை கீழ்கண்டுள்ளவாறு பெறப்பட்டுள்ளது.

| வ எண் | துணை ஆய்வாளர் சர்வே | களப் பணியாளர் | வருடம் | நில அளவை கட்டணம் ரூ. | ஓய்வூதிய பங்குத் தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | 2 | 2006–07 | 178937 | 32650 | 211587 |
| 2 | 1 | 2 | 2007–08 | 451096 | 82800 | 533896 |
| 3 | 1 | 2 | 2008–09 | 487160 | 90192 | 577352 |
| 4 | 1 | 2 | 2009–10 | 534040 | 99804 | 633844 |
| 5 | 1 | 2 | 2010–11 | 591736 | 111612 | 703348 |
| 6 | 1 | 2 | 2011–12 | 642224 | 121980 | 764204 |
| 7 | | | 2012–13 | 696304 | 133056 | 829360 |
| | | | | 3581497 | 672094 | 4253591 |

இந்நிலையில் 19.12.2019ல் வரப்பெற்ற மேற்கண்ட கடிதத்தின் மூலம் 2006—07 முதல் 2012—13 வரையிலான காலத்திற்குரிய நில அளவை கட்டணம் ரூ.3581497/— மற்றும் ஓய்வூதிய பங்குத்தொகை ரூ.672094/— மொத்தம் ரூ.4253591/— செலுத்தப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து நகர் மன்றம் தீர்மானம் எண் 1377 நாள் 29.7.2016 ல் 2006—07 முதல் 2008—09 வரையிலான காலத்திற்குரிய தொகை செலுத்த ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில், 20.3.*2017* ஆம் தேதியில் 2006—07 ஆம் ஆண்டுக்குரிய தொகை ரூ.211587/— மற்றும் 17.12.2019ஆம் தேதியில் 2007—08 ஆம் ஆண்டுக்குரிய தொகை ரூ.533896/— ஆகியன அரசு கருவூலத்தில் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

மீதமுள்ள தொகைகளை ஆண்டு வாரியாக உள்ள நில அளவை கட்டணம் மற்றும் ஓய்வூதிய பங்குத்தொகை ஆகியவற்றை செலுத்த கோரப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ள நில அளவைத் துறை கடிதம் மற்றும் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** நில அளவைக் கட்டணம் மற்றும் ஓய்வூதிய பங்குத் தொகை செலுத்த அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1403/2014/எப்1)

பொருள் எண்.18

இந்நகராட்சிக்கு சொந்தமான கடப்பேரி புதிய பேருந்து நிலைய வணிக வளாக கடை எண்.30 மற்றும் சண்முகம் ரோடு வணிக வளாக கடைகள் கடை எண்.26 மற்றும் கடை எண்.1 ஆகிய கடைகளை மாத வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்து 01.02.2017 முதல் 31.01.2020 வரை மூன்று ஆண்டுகளுக்கு நகரமன்ற தீர்மானம் எண்.1689 நாள்.31.03.2017 ல் குத்தகை ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் கடை எண்.1 ற்கு மாத வாடகை அதிகமாக உள்ளது என தெரிவித்து குத்தகைதாரர் திரு.M. குத்தூஸ்கனி என்பவரால் தாம்பரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு I.A.No.47/2016, O.S.No.-11/2016 வழக்கு நிலுவையில் உள்ளதால் 01.03.2017 முதல் வாடகை உயர்வு செய்து வழங்க இயலவில்லை. தற்போது மேற்படி குத்தகைதாரர் மாத வாடகையினை நிலுவையுடன் சேர்த்து செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும் அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை 9 நாள்.03.07.2007 ன் படியும் மேற்படி மூன்று கடைகளுக்கு 15 சதவீதம் உயர்த்தி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | கடை எண் | வ.வி.எண். | 01.02.2017 முதல் மாத | 15 சதவீதம் உயர்வு செய்யப்படும் | 01.08.2020 முதல் 15% உயர்வுக்கு |
|---|---|---|---|---|---|---|

| | | | | வாடகை ரூ. | தொகை ரூ. | பின் வாடகை நிர்ணயம் செய்யப்படும் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | C. வேலுச்சாமி கடப்பேரி பேருந்து நிலையம் 30 கடைகள் | 30 | 2014004 | 52440/– | 7866/– | 60306/– |

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | கடை எண் | வ.வி.எண். | 10.02.2017 முதல் மாத வாடகை ரூ. | 15 சதவீதம் உயர்வு செய்யப்படும் தொகை ரூ. | 01.08.2020 முதல் 15% உயர்வுக்கு பின் வாடகை நிர்ணயம் செய்யப்படும் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | A. கிரிஜா கடப்பேரி பேருந்து நிலையம் 30 கடைகள் | 26 | 2014021 | 11098/– | 1665/– | 12763/– |

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | கடை எண் | வ.வி.எண். | 10.02.2017 முதல் மாத வாடகை ரூ. | 15 சதவீதம் உயர்வு செய்யப்படும் தொகை ரூ. | 01.08.2020 முதல் 15% உயர்வுக்கு பின் வாடகை நிர்ணயம் செய்யப்படும் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1. | M. குத்தூஸ்கனி கடப்பேரி பேருந்து நிலையம் 30 கடைகள் | 1 | 2014044 | 1,05,000/– | 15750/– | 120750/– |

<u>அலுவலக குறிப்பு</u>:– நிர்வாக நலன் கருதி மேற்படி கடை எண்.30 க்கு 01.02.2020 முதல் 31.01.2023 வரை 3 ஆண்டுகளுக்கும், கடை எண்.26 க்கு 01.03.2020 முதல் 28.02.2023 வரை 3 ஆண்டுகளுக்கும் மற்றும் கடை எண்.1 க்கு 01.03.2017 முதல் 28.02.2020 வரை 3 ஆண்டுகளுக்கும் மாத வாடகையில் 15 சதவீதம் வாடகை உயர்த்தி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4266/2016/அ1)

பொருள் எண்.19

தாம்பரம் நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகள் மேற்கு தாம்பரம் வார்டு எண்.38. கன்னடபாளையம் குப்பை கிடங்கில் 40 வருட காலமாக கொட்டப்பட்டு வந்தது. இதனை தவிர்க்கும் விதத்தில் அறிவியல் ரீதியாக திடக்கழிவுகளை கையாண்டு வெளியேற்றி அப்புறப்படுத்தும் விதமாக வண்டலூருக்கு அருகே வேங்கடமங்கலம் கிராமத்தில் நில அளவை எண்.16/1, 2 மற்றும் 2ல் 50 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் பல்லவபுரம்–தாம்பரம் நகராட்சிகளுக்கு கூட்டாக திடக்கழிவிலிருந்து சக்தி தயாரித்திடும் தொழிற்கூடம் ஒன்றினை அமைத்திட திட்டம் வகுக்கப்பட்டது.

தாம்பரம் நகராட்சியில் தினசரி சுமார் 90 டன் திடக்கழிவுகள் உருவாகுகிறது. இதில் 45 டன் மக்கும் கழிவுகள், 31 டன் மக்காத கழிவுகள், 14டன் இதர கழிவுகள் பிரித்து பெறப்பட்டு, தற்போது மக்கும் குப்பைகளை 8 எண்ணம் பசுமை உரக்குடில்கள் மற்றும் 19 எண்ணம் சிறு பசுமை உரக்குடிலில் உரமாக்கப்பட்டு வருகிறது. உலர் கழிவுகளில் விற்பனை செய்யக்கூடியவை புதன் கிழமை தோறும் விற்பனை செய்யப்பட்டு பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக பிரித்து வழங்கப்பட்டு வருகிறது. எரியக்கூடிய உலர் கழிவுகள் அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு கலைச்செல்வி பிளாஸ்டிக் மார்ட் நிறுவனத்திற்கும் அனுப்பப்பட்டு வருகிறது. மீதமுள்ள கசடு மண் மற்றும் இதர கழிவுகள் வேங்கடமங்கலத்தில் டுயனேகடைட இடத்தில் நிரவப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வேஙகடமஙகலம் பகுதி வாழ் பொது மக்களின் புகார் அடிப்படையிலும், ஜான் வெஸ்ட்லி மற்றும் பலர் தேசிய பசுமை தீர்பாயத்தில் வழக்கு தொடர்ந்ததில், தாம்பரம் நகராட்சி 5வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு, மேற்படி வழக்கின் தீர்ப்பில் நகராட்சியின் சார்பாக பிணைத்தொகையாக ரூ.50.00 இலட்சத்திற்கு வங்கி உத்திரவாதத்தினை தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியத்திற்கு ஒருமாத காலத்திற்கு வழஙக உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி பசுமை தீர்பாய உத்திரவிற்கினங்க, பிணைத்தொகை ரூ.50.00 இலட்சத்திற்கு தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம், சென்னை என்ற பெயரில் ஆறு மாத காலத்திற்கு வஙகி உத்திரவாத பத்திரம் (Performance Guarantee) எடுத்து வழஙகிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.124/2019/இ1)

பொருள் எண்.20

தாம்பரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் TN 22 AP 1184 Eicher வாகனம் தகுதி சான்று பெற வேண்டியுள்ளதால் வாகனத்தின் சில பழுதுகளை பழுது நீக்கம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், தோராய செலவினம் ரூ.1,46,000/–ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:—அ) மன்றம் அனுமதி வழங்கலாம்
ஆ) பொது சுகாதார அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.5274/2019/எச்1)

பொருள் எண்.21

தாம்பரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் TN 22 AP 1734 Eicher வாகனம் தகுதி சான்று பெற வேண்டி வாகனத்தின் சில பழுதுகளை பழுது நீக்கம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், தோராய செலவினம் ரூ.2,47,000/—ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:—அ) மன்றம் அனுமதி வழங்கலாம்
ஆ) பொது சுகாதார அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.83/2020/எச்1)

பொருள் எண்.22

தாம்பரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் TN 22 AP 1734 Eicher வாகனம் 04.03.2020 ல் தகுதி சான்று பெற வேண்டி வாகனத்தின் சில பழுதுகளை பழுது நீக்கம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், தோராய செலவினம் ரூ.2,47,000/—ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:—அ) மன்றம் அனுமதி வழங்கலாம்
ஆ) பொது சுகாதார அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.83/2020/எச்1)

பொருள் எண்.23

தாம்பரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மமை திட்டத்தின் கீழ் தினந்தோறும் உருவாகும் கழிவுகளில் மக்காத, மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை கன்னடபாளையத்தின் டாரஸ் வாகனத்தில் ஏற்றிவிடவும், வேங்கடமங்கலத்தில் குப்பைகளை பெற்று சமன் படுத்திடவும் இரண்டு பொக்லைன் இயந்திரங்களை Per Hour ரூ.2400/— என **Jan 2020** ஒரு மாத காலத்திற்கு தனி அலுவலரின் 24.12.2019—ம் தேதிய முன் அனுமதியின் பேரில் வேங்கடமங்கலம் மற்றும் கன்னடபாளையம் ஆகியவற்றில் சப்ளை செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகின்றன.

இப்பணியினை தொடர்ச்சியாக செய்ய வேண்டியுள்ளதால், மேலும் ஆறு மாத காலத்திற்கு (பிப்ரவரி 2020 முதல் ஜூலை 2020 வரை) நீட்டிப்பு செய்து, இரண்டு பொக்லைன் இயந்திரங்களை வேங்கடமங்கலம் மற்றும்

கன்னடபாளையத்தில் ஏற்கனவே வழங்கிய விலை விகிதத்தில் (ரூ.2400/– Per Hour) சப்ளை செய்து கொள்வதற்கும், தோராய செலவினம் ரூ.59.40 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–அ) மன்றம் அனுமதி வழங்கலாம்

ஆ) பொது சுகாதார அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4440/2019/எச்1)

பொருள் எண்.24

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சாலைகள், மழைநீர் வடிகால்வாய், சிறுபாலங்கள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதியின் கீழ் கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள பணி மதிப்பீடுகளுக்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 18 | கிழக்கு தாம்பரம் ராஜா அய்யர் தெரு பகுதி தார் சாலை அமைத்தல் | 9.90 |
| 2 | 27 | ரிக்கி கார்டன் 5வது குறுக்கு தெரு தார் தளம் அமைத்தல் | 9.95 |
| 3 | 13 | டி.என்.எச்.பி குடியிருப்பு பகுதி தெரு பேவர்பிளாக் அமைத்தல் | 9.95 |
| 4 | 17 | திருவள்ளுவர் தெரு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 9.90 |
| 5 | 20 | பாதாள சாக்கடை திட்டம் மண்டலம் எண்.2 வார்டு எண்.20ல் ஆள்நுழைவு வாயில்கள் உயர்த்துதல் | 9.00 |
| 6 | 18 | பாதாள சாக்கடை திட்டம் மண்டலம் எண்.2 வார்டு எண்.18ல் ஆள்நுழைவு வாயில்கள் உயர்த்துதல் | 4.75 |
| 7 | 18 | தாங்கல்கரை தெரு மழைநீர் வடிகால்வாய் பழுதுபார்த்தல் மற்றும் ஆர்.சி.சி மூடுபலகை அமைத்தல் | 9.80 |
| 8 | 19 | தனலஷ்மி நகர் விடுப்பட்ட பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 9.60 |
| 9 | 23 | அம்பேத்கார் தெரு, மாதா கோவில் தெரு மழைநீர் வடிகால்வாய் பழுதுபார்த்தல் | 9.80 |
| 10 | 11 முதல் 27 | கிழக்கு தாம்பரம் பகுதிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உடைந்த HDPE தொட்டிகளை மாற்றியமைத்தல் மற்றும் புதிய HDPE தொட்டிகள் அமைத்தல் பணி | 9.90 |

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 11 | 38 | அண்ணா பேருந்து நிலையம், SS கைப்பிடிகள் அமைத்தல் மற்றும் WMM கொண்டு தற்காலிக சாலை அமைத்தல் | 3.00 |
| 12 | 2 | மௌலான நகர் குப்பைகள் கையாளும் மையத்தில் அலுவலக அறை, குப்பை எருவாக்கும் தொட்டிகள், அரைப்பான், கன்வேயர் பெல்ட், ஆழ்துளை கிணறு மோட்டார்கள் பொருத்துதல் மற்றும் பெயர் பலகைகள் தளவாடங்கள் வாங்கி பொருத்துதல் பணி | 20.00 |
| 13 | 30 | கல்யாண் நகர் நகராட்சி ஆரம்ப பள்ளிக்கு கூடுதல் பள்ளி கட்டிடம் கட்டுதல் பணி | 24.50 |
| 14 | 30 | கல்யாண் நகர் ஆரம்ப பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள சேலார் பேனல்களை முதல் தள கூரையில் அகற்றி 2வது தளகூரையில் பொருத்துதல் வகுப்பறை கட்டிடங்களுக்கு மின்வசதி, மின்விசிறி விளக்குகள் பொருத்துதல் பணி | 18.00 |
| 15 | 5 | ரங்கநாதபுரம் பகுதியில் சிறுபாலங்கள் மற்றும் வடிகால்வாய் பழுதுபார்த்தல் பணி | 9.90 |
| 16 | 6 | ரங்கநாதபுரம் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் பழுதுபார்த்தல் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 9.90 |
| 17 | 39 | ராஜகோபால் நகர் பூங்கா சுற்றுசுவர் பழுதுபார்த்தல், சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல் | 9.60 |
| 18 | 23 | வினோபா நகர் நகராட்சி பள்ளியில் மேம்பாடு பணிகள் செய்தல் | 2.00 |
| 19 | | கிழக்கு தாம்பரம் காந்தி பூங்கா நடைபாதையில் LED விளக்குகள் பொருத்தி பராமரிப்பு பணிகள் செய்தல் | 9.50 |

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 371/2020/இ1,இ2,இ3)

பொருள் எண்.25

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சாலைகள், மழைநீர் வடிகால்வாய், சிறுபாலங்கள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதியின் கீழ் கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள பணி மதிப்பீடுகளுக்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 18 | ரங்கநாதன் தெரு (பொன்னியம்மன் கோவில் தெரு) தார் சாலை அமைத்தல் | 9.95 |
| 2 | 26 | பலராமன் தெரு மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 6.25 |
| 3 | 15 | கம்பர் தெரு மற்றும் பாரதமாதா தெருவில் அடிகுழாய்களை மின்விசை பம்புகளாக மாற்றுதல் | 2.80 |
| 4 | 13 | வால்மீகி தெரு ஜெயஜோதி அன்டு பீரித்தி அபார்ட்மெண்ட் அருகில் மற்றும் காசியப்பர் தெருவில் அடிகுழாயில் மின் மோட்டார்கள் பொருத்திடுதல் | 2.50 |
| 5 | 18 | முத்துமாரியம்மன் கோவில் தெரு மழைநீர் வடிகால்வாய் பழுதுபார்த்தல் மற்றும் ஆர்.சி.சி மூடுபலகை அமைத்தல் | 9.90 |
| 6 | | காந்தி நகர் பூங்கா கழிவறை, விஜயரங்கம் தெரு நம்ம கழிவறை,ஏரிக்கரை தெரு நம்ம கழிவறை பழுதுபார்த்தல் | 5.00 |
| 7 | | அருள் நகர், அம்பேத்கார் சுடுகாடு, சேலையூர் சுடுகாடு மற்றும் இரட்டை சாலை பகுதியிலுள்ள ஆஊஊ இந்திரங்கள் ஆண்டு பராமரிப்பு | 6.00 |
| 8 | 23, 13 | அன்னை தெரசா தெரு, குலசேகரன் தெருவில் ஆழ்துளை கிணறு மற்றும் சிறுமின்விசை பம்பு அமைத்தல் மற்றும் 13 இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் | 8.85 |
| 9 | 21 | பாரத் நகர் பகுதியில் உள்ள பயோகேஸ் வளாகத்தில் பழுது பார்த்தல் | 2.50 |
| 10 | 18 | ராஜாஜி தெரு, முத்துமாரியம்மன் கோவில் தெரு பகுதி மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 9.00 |
| 11 | 1, 2 | திருநீர்மலை சாலை பஜனை கோயில் தெரு, கே.கே.பாளையம் பிள்ளையார் கோவில் தெரு, துர்கா நகர் சிறுமின்விசை மோட்டார் அமைத்தல் | 6.70 |
| 12 | 31, 2,39 | வார்டு எண்.31ல் குளக்கரை, வார்டு எண். 2ல் நுக்ஷ காலனி அடிகுழாய்களை சிறுமின்விசை பம்புகளாக மாற்றுதல் மற்றும் ராஜீவ்காந்தி நகர், | 4.20 |

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| | | ரங்கநாதபுரம் சிறுமின்விசை மோட்டார் அமைத்தல் | |
| 13 | 32 | சி.டி.ஓ காலனி தரைவழிப் பாதையில் மழைநீர் வடிகால் சிமெண்ட் தளம் அமைத்தல் | 3.60 |
| 14 | 38 | கன்னடப்பாளையம் குப்பை கிடங்கு, ஆஊஊல் இயந்திரங்கள் பழுது பார்த்தல் | 1.00 |
| 15 | 38 | TNHB தெரு மழைநீர் வடிகால்வாய் மூடுபலகையுடன் அமைத்தல் | 9.00 |
| 16 | | வேங்கடமங்கலம் தீயணைப்பு ஜெனரேட்டர் பழுதுபார்த்தல் | 4.50 |
| 17 | 35 | அம்பேத்கார் திருமண மண்டபத்திற்கு இருக்கைகள் சப்ளை செய்தல் மற்றும் பராமரிப்பு பணி | 5.00 |
| 18 | 38 | கன்னடப்பாளையம் பஜனை கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 4.00 |
| 19 | 4 | வார்டு எண்.4ல் கடப்பேரி குளத்திற்கு பேவர்பிளாக் பாதை அமைத்தல் | 9.80 |

அலுவலக குறிப்பு :– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 240/2019/இ1,இ2,இ3)
பொருள் எண்.26

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சாலைகள், மழைநீர் வடிகால்வாய், சிறுபாலங்கள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதியின் கீழ் கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ள பணி மதிப்பீடுகளுக்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 18 | சேலையூர் நகராட்சி மேல் நிலைப்பள்ளிக்கு கேபிள், பேனல் போர்டுகள் மாற்றுதல் மின் வசதி செய்தல் | 7.80 |
| 2 | 18 | சேலையூர் நகராட்சி பிரதான நுழைவு கிரில் கேட்டுகள் மாற்றி பொருத்துதல் நுழைவு சாய்வுதளம் அமைத்தல் | 3.00 |

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 3 | 22 | புரப்பசர் காலனி இரட்டை சாலை பகுதியில் தார் தளம் அமைத்தல் | 9.80 |
| 4 | 22 | காந்தி தெரு மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 9.90 |
| 5 | 18 | சேலையூர் நகராட்சி மேல்நிலை பள்ளியில் கலையரங்கம் தரை தளம் முதல் தளங்களில் மின்விளக்கு பணிகள் செய்தல் மற்றும் அரசு கல்வி சேனல் ஒளிபரப்பிற்கு 60” டிவி பொருத்துதல் பணி | 9.00 |
| 6 | 18 | சேலையூர் நகராட்சி மேல்நிலைப் பள்ளி கிழக்கு கட்டிடத்தில் கதவுகள் பழுது பார்த்தல், மின்வசதி மற்றும் வண்ணபூச்சு பணிகள் செய்தல் | 7.50 |
| 7 | 18 | சேலையூர் நகராட்சி மேல்நிலை பள்ளி மாணவர்களுக்கு கழிவறைக்கு தண்ணீர் வசதி மற்றும் மின்விளக்கு வசதி செய்தல் | 7.70 |
| 8 | 19,20 | அவ்வை நகர் பிரதான சாலை மற்றும் திருவள்ளுவர் தெரு தார் தளம் அமைத்தல். | 9.50 |
| 9 | 1 | அம்மன் நகர் 2வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 2.00 |
| 10 | 32 | மீனாம்பாள் குறுக்குத்தெருவில் மழைநீர் வடிகால்வாய் மூடியுடன் அமைத்தல் | 4.50 |
| 11 | 38 | முல்லை நகர் 5வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகை அமைத்தல் | 7.90 |
| 12 | | நகராட்சி அலுவலக கட்டிடம் கம்யூட்டர் மையம், பொறியியல் பிரிவு மற்றும் பொது கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் | 8.60 |
| 13 | 35 | சண்முகம் சாலை நகராட்சி கடை கட்டிடம் கிழக்கு பகுதி மேற்கூரை மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல் | 9.90 |
| 14 | 4 | தாமஸ் தெருவில் மழைநீர் வடிகால்வாய் பழுதடைந்த பகுதிகளை சீரமைத்து மூடுபலகை அமைத்தல் | 4.00 |
| 15 | 28 | டிடிகே நகர் 2வது பிரதான சாலை சிறுபாலம் அமைத்தல் பணி | 2.60 |
| 16 | 28 | இரும்புலியூர் நகராட்சி பள்ளியில் கழிவறை குழாய்கள், | 5.00 |

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| | | கூட்டமேடை, வடிகால்வாய் பழுதுபார்த்தல் மற்றும் மின் விளக்கு வசதி செய்தல் | |

அலுவலக குறிப்பு:–மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 371/2020/இ1,இ2,இ3)

பொருள் எண்.27

தாம்பரம் நகராட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்த பணிகளில் ஒப்பந்ததாரர்கள் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி செலுத்த வேண்டியுள்ளதாக தொழிலாளர் வைப்பு நிதி ஆணையாளர் அவர்களின் கடித எண்.TB/TAM/CC-I/T-8/63252/Proceedings/2019 நாள்.31.12.2019 (இவ்வலுவலகத்தில்பெறப்பட்ட நாள்.14.01.2020) ல் ரூ.2,32,10,796/– ஆகிய தொகைகளை 15 நாட்கள் கால அவகாசத்திற்குள் நகராட்சியினை செலுத்த தெரிவித்து உத்தரவுகள் பெறப்பட்டுள்ளது.

வரப்பெற்ற இந்த உத்தரவுகளில் மனித சக்தியினை (manpower) கொண்டு பணி மேற்கொண்டு வரும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து நிறுவனங்கள் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் மட்டும் குறிப்பிட்டு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

1. M/s. Akash Engineering Associates
2. M/s. Anthony Waste Handling Cell Private Limited
3. M/s. Daspan Industries
4. M/s. Srinivasa Waste Management Private Limited
5. M/s S.R. Manpower Consultancy

மேலும் மற்ற ஒப்பந்தாரர்கள் அனைவரும் விற்பனையாளர்களாக (Suppliers) கருதப்பட்டுள்ளனர் என்றும், தெரிவித்து தொகைக்கான பட்டியல் இணைத்து அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால் இணைத்து வரப்பெற்ற பட்டியலில் ஏப்ரல் 2011 முதல் மார்ச் 2017 வரை மற்றும் ஏப்ரல் 2017 முதல் நவம்பர் 2017 வரை உள்ள பட்டியல்களில் அனைத்து ஒப்பந்ததாரர்கள் செய்துள்ள பணியினை குறிப்பிட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்பட்டியலில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள அந்து ஐந்து ஒப்பந்ததாரர்களின் தொகைகளை மட்டும் இப்பட்டியலில் சுழித்து கணக்கீடு செய்யப்படும் பட்சத்தில் ஏப்ரல் 2011 முதல் மார்ச் 2017 வரையிலான பட்டியலுக்கு தொகை ரூபாய் 1,38,79,359/– என்றும்,

ஏப்ரல் 2017 முதல் நவம்பர் 2017 வரையிலான பட்டியலுக்கு தொகை ரூபாய் 1,25,81,393/— என்றும் முடிவடைகிறது.

எனவே, தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மூலம் வழங்கப்பட்டுள்ள பட்டியலின் கணக்கீடு தவறாக உள்ளது என சுட்டி காட்டியும், ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டிய தொகையினை நகராட்சியால் செலுத்த இயலாது என தெரிவித்து இந்த உத்தரவின் மீது உறுத்துகட்டளை(stay) பிறப்பிக்க கேட்டும், மேலும் waiver petition னும் நகராட்சி வழக்கறிஞர் திரு.ப்பி. ஸ்ரீநிவாஸ் அவர்களின் மூலம் மேல்முறையீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் மேற்குறித்த இரண்டு வழக்குகளுக்கு தீர்பாய கட்டணம் ரூ.2000/— மதிப்பிலான இரண்டு வங்கி வரைவோலையினை தனித்தனியாக The Registrar, Central Govt Industrial Tribunal, Chennai என்ற பெயரில் எடுத்து செலுத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இவ்வழக்கினை ஏற்று நடத்தி வரும் நகராட்சி வழக்கறிஞர் திரு.ப்பி. ஸ்ரீநிவாஸ் ஒவ்வொரு முறையீட்டிற்கும் ரூ.25000/—வீதம் இரண்டு வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.50000/— வழங்கிட கடிதத்தில் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

மேலும் இவ்வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகளுக்கும் மேற்குறித்த வழக்கறிஞர் கட்டணம், நீதிமன்ற கட்டணம் ஆகியவை சேர்த்து தோராய செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—1) மன்றம் அனுமதி வழங்கலாம்**

2) வழக்கின் அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொறுப்பு) அவர்களின் முன் அனுமதி பெற்று தீர்ப்பாய கட்டணம் ரூ.2000/— வீதம் இரண்டு வங்கி வரைவோலைகள் The Registrar Central Govt Industrial Tribunal Chennai என்ற பெயரில் செலுத்திடவும் மற்றும் வழக்கின் முக்கியத்துவத்தினை கருதி ஒரு வழக்கிற்கு ரூ.25000/— வீதம் இரண்டு வழக்குகளக்கு சேர்த்து ரூ.50000/— வழக்கறிஞர் கட்டணம் வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

3) மேற்படி வழக்கு நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கும் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேலும் 2019—20 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.351/2019/இ3)

பொருள் எண்.28

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகளாலும் மற்றும் அதிக போக்குவரத்து காரணமாகவும், இயற்கை இடர்பாடுகள் காரணமாகவும் சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு (TURIP) 2019–20 திட்டத்தின் கீழ் மறு சீரமைப்பு செய்து அபிவிருத்தி செய்ய ரூ.2000.00 லட்சம் மதிப்பீட்டில், சிப்பங்களாக பிரித்து செயல்படுத்த, நகரமன்ற தீர்மான எண்.460, நாள்.06.09.19ல் அனுமதி பெறப்பட்டதன் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி செயல்முறை ந.க.எண். 17349/2019/இ3, நாள் 24.07.2018 ல் வழங்கப்பட்டது. மேலும் மேற்படி திட்ட மதிப்பீடுகளுக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.25039/2019/DO1, நாள்.21.10.2019 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு 14.11.2019ல் ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு நகரமன்ற தீர்மான எண்.618, நாள். 29.11.2019ல் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களது ஒப்பந்தபுள்ளிக்கு ஒப்புதல் பெறப்பட்டு, 06.12.2019ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழான சிப்பம் எண். 5க்கு மெசர்ஸ். அபெக்ஸ் சிவில் என்ஜினியரிங் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. இச்சிப்ப பணியில் இந்திரா நகர் கிழக்கு 1வது தெரு, லஷ்மி நகர் பிரதான சாலை, பவானி நகர், லோரா தெரு, உமா நகர், சக்தி அவென்யூ (வார்டு எண்.21) கிரைஸ் கிங் தெரு, அம்பேத்கார் தெரு, அம்பேத்கார் 1வது தெரு, கலைஞர் தெரு, (வார்டு எண்.22), அன்னை தெரசா தெரு, லால்பகதூர் சாஸ்திரி தெரு (வார்டு எண்.23), செந்தமிழ் சேதுபிள்ளை தெரு, குறுக்கு தெரு, வடக்கு தெரு (வார்டு எண்.24), உ.வே. சாமிநாதன் தெரு, எம்.இ.எஸ். 1 வது தெரு, 3வது தெரு, சர்மா தெரு, வி.வி. அய்யர் தெரு, பஜனை கோயில் தெரு (வார்டு எண்.25), சுத்தானந்த பாரதி தெரு (வார்டு எண்.26), செல்லியம்மன் கோவில் தெரு, செல்லியம்மன் கோவில் 4வது தெரு (வார்டு எண்.27) தார் தளம் அமைக்கும் பணி மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி பணியில் வார்டு எண்.21 ல் லஷ்மி நகர் பிரதான சாலை, வார்டு எண். 23ல் லால்பகதூர் சாய்திரி தெரு,செந்தமிழ் சேதுபிள்ளை தெரு, குறுக்கு தெரு, வடக்கு தெரு, யு.வி சாமிநாதன் தெரு, எம்.இ.எஸ் 1வது, 3வது தெரு, சர்மா தெரு, வி.வி ஐயர் தெரு, பஜனை கோயில் தெரு, செல்லியம்மன் கோவில் தெரு, செல்லியம்மன் கோவில் 4வது தெரு ஆகிய தெருக்களில் பாதாள சாக்கடை வீட்டிணைப்பு பணிகள் முழுமையாக முடிவடையதால், மேற்படி தெருக்களில் தற்போது பணி மேற்கொள்ள இயலாத சூழ்நிலை உள்ளது மேலும் பாதாள சாக்கடை திட்டப்பணி வீட்டிணைப்பு பணி முடித்த பின்பு முழு சாலையையும் மறுசீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட

வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். மேற்படி திட்டம் அரசு மான்யத்தில் மேற்கொள்ளப்படுவதால், பாதாள சாக்கடை பணிகள் முடிவடைந்த சாலைகளை சீரமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாலும், திட்டப் பணியை முடித்து அரசுக்கு பணி முடிவு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதால், மேற்படி பணி செய்ய தேர்வு செய்யப்பட்ட வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் முடிக்கப்பட்ட சாலைகளான வார்டு எண்.21 ல் மாடம்பாக்கம் பிரதான சாலை அகரம் தென் சாலை(அருகில்), வார்டு எண். 22ல் வள்ளலார் தெரு, அண்ணா தெரு, எம்.ஜி.ஆர் தெரு, புரப்பசர் காலனி, SOS சாலை, MES பிரதான சாலை மற்றும் 2வது தெரு ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முழுமையாக முடிவுற்று குண்டும் குழியுமான சாலையாக உள்ளதால், எனவே மேற்படி சாலையை சீரமைக்கும் பணியினை குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்மெசர்ஸ். அபெக்ஸ் சிவில் என்ஜினியரிங் என்ற ஒப்பந்ததாரர் மூலமே அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகைக்குள் செய்து முடித்திட தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதியுடன் பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—1)** மன்றம் அனுமதி வழங்கலாம்

2) அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி பணியை செய்திட தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3380/2019/இ1)**

பொருள் எண்.29

தாம்பரம் நகராட்சி கிழக்கு தாம்பரம் பகுதி வார்டு எண்.23 ல் அவ்வை தெரு தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ.24.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, உரிய வழிமுறைகளை பின்பற்றி 01.03.2016 ல் பணி உத்தரவு மெசர்ஸ். ஜுபிடர் அன் கோ என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி தெருவில் பல்வேறு காரணங்களால் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த முடியாமல் இருந்த நிலையில் தற்போது பாதாள சாக்கடை திட்டம் அண்ணா தெரு மற்றும் அதன் தொடர்ச்சியாக அன்னை தெரசா தெரு மற்றும் கிராப்ட் கிங் தெரு பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் நடந்து செல்ல முடியாத நிலையில் சாலை மிகவும் மோசமடைந்துள்ளது. மேலும் மேற்படி சாலையில் வீட்டு இணைப்புகள் வழங்கப்படாமல் உள்ளதால், தார் சாலை அமைக்க சாத்தியமில்லை. எனவே மேற்படி சாலைகள் போக்குவரத்துக்க் ஏற்றவாறு WMM வரை பணி மேற்கொண்டு போக்குவரத்தினை சீர் செய்திடவும், அண்ணா தெருவிலேயே விடுபட்ட கால்வாய் பணி மேற்கொள்ளவும், அதே பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் முடிக்கப்பட்டுள்ள காமராஜர் தெரு மற்றும் காந்தி தெரு, விரிவு பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் முடிவு பெற்று

வீட்டிணைப்பு வழங்கப்பட்ட சாலைகளுக்கு தார் சாலைகள் அமைக்கவும், மேற்படிபணி உத்தரவு பெறப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்ட விலை விகிதத்தில் மதிப்பீடு தொகைக்குள் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–1)** மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

2) பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்ககலாம்.

**(ந.க.எண். 241/2019/இ1)**

பொருள் எண்.30

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் அவர்களின் கடிதம் ந.க.எண்.648/2019/A2 நாள் 27.11.2019 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க இந்நகராட்சி மூலம் 2018–2019 மற்றும் 2019–2020 க்கான செலுத்த வேண்டிய வருடாந்திர சந்தா தொகை ரூ.3,00,000/– தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூருக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.46/2020/சி1)

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தாம்பரம் நகராட்சி